2011 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—
தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிரிகளின் பாய்ந்து வருகின்ற சட்டிமுனைத் தாக்குதல்களைக் கூட துணிச்சலோடு எதிர்கொள்கின்ற ஆற்றலையும், திறமையையும், தைரியத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கே பெற்றிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே, கல்லைவிட வலிமையானது இரும்பு, இரும்பைவிட வலிமையானது நெருப்பு, நெருப்பைவிட வலிமையானது நீர், நீரைவிட வலிமையானது காற்று, காற்றைவிட வலிமையானது மலை, அந்த மலை போன்ற வலிமையான மனோபாவத்தையும்,*

நெஞ்சுரத்தையும் பெற்றிருக்கின்ற எங்கள் நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் அன்பு தெய்வத்தைப் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஊ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,